**செய்தி வெளியீடு எண்:369** **நாள்: 29.05.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.5.2020 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 15 கோடியே 62 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன தரத்துடன் கூடிய புதிய விளையாட்டு வளாகக் கட்டடம், செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழக வளாகத்தில் 6 கோடியே 97 லட்சத்து 50 ஆயிரத்து ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சைக்கிளிங் வெலோடிரம் மற்றும் நிர்வாகக் கட்டடம், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 4 கோடியே 84 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆறு வரிசைகள் கொண்ட செயற்கை இழை ஓடுதளப் பாதை ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில், அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், அவர்கள் தங்கி பயிற்சி பெற விளையாட்டு விடுதிகளை ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த கட்டடங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளை இடித்துவிட்டு, அந்த இடத்தில் 15 கோடியே 62 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன தரத்துடன் கட்டப்பட்டுள்ள கூட்ட அரங்கம், அலுவலர் அறை, பயிற்றுநர் அறை, அலுவலக அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றும் அறை, சமையலறை, உணவருந்தும் கூடம், தங்குமிட வசதி, கணினி அறை, நூலகம், பதிவறை, இருப்பு அறை, முதலுதவி அறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய நிர்வாகக் கட்டடம்,

பார்வையாளர் மாடத்துடன் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம், கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து ஆடுகளங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழக வளாகத்தில் சைக்கிளிங் பயிற்சி மற்றும் போட்டிகள் நடத்த ஏதுவாக 6 கோடியே 97 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 333 மீட்டர் சுற்றளவு கொண்ட சைக்கிளிங் வெலோடிரம், பார்வையாளர் மாடம், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தனித்தனியே தங்குமிட வசதி, சைக்கிள் பட்டறை, சைக்கிள் இருப்பு அறை, உடற்பயிற்சிக் கூடம், பயிற்றுநர் அறை, அலுவலக அறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய நிர்வாகக் கட்டடம்;

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் 4 கோடியே 84 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆறு வரிசைகள் கொண்ட 400 மீட்டர் செயற்கை இழை ஓடுதளப் பாதை;

என மொத்தம் 27 கோடியே 44 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு கட்டமைப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் திரு.ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**